தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ௲௧	மலர்
௪௪	சாதாரண, ஆவணி	௫
	(1970 — ஆகஸ்டு — செப்டம்பர்)	

திராவிட மொழிகளில் பால் - எண் வேறுபாடு

டாக்டர். மோ. இசரயேல்,

தமிழ்த்துறை, மதுரைப் பல்கலைக் கழகம்.

தமிழ் மொழியில் திணை, பால், எண் என்னும் இலக்கண வேறுபாடுகள் அமைந்திருத்தலும் அவற்றை இலக்கண நூலார் விளக்கிக் கூறி இருத்தலும் தமிழறிஞர் யாவரும் அறிவர். இவை மூன்றாக வேறுபடுத்திப் பெயர் சுட்டப்பட்டிருந்தாலும் தமிழில் மட்டுமன்றி எல்லாத் திராவிட மொழிகளிலும் மூன்றும் ஒன்றோடொன்று தொடர்புடையதாய், பிரித்துக்காட்ட இயலாத வாறு பிணைந்து கிடக்கின்றன. திராவிட மொழிகள் பலவற்றி லும் தமிழில் காணப்படுதல் போன்று திணை வேறுபாடு தெளி வுற அமைதல் இல்லை. பகுத்தறிவு அடிப்படையில் பாகுபாடு செய்யப்பட்ட திணை பகுப்பு அமையாமையே காரணமாகும்.

திணை :— தமிழில் உயர்திணை, அஃறிணை என்ற இரு பகுப்பில் எல்லாவற்றையும் அடக்கி, மக்கள், தேவர், நரகர் உயர்திணை எனவும் மற்று உயிருள்ளனவும் அல்லனவும் அஃறிணை எனவும் கொள்ளப்படுகின்றது. [1] தெலுங்கில் மஹத், அமஹத் என இருவகையாகப் பாகுபாடு செய்யப்பட்டு, பெண்பால் ஒருமை அமஹத் என்னும் பகுப்பில் சேர்க்கப் பட்டுள்ளது, தென் திராவிட மொழிகளான மலையாளம், கன்னடம், படகா, கோதா ஆகியவற்றிலும், நடுத் திராவிட மொழியான துளுவிலும் காணும் பால் வேறுபாட்டை நோக் குங்கால் அவற்றில் தமிழ் மொழியின் இயல்பிலேயே திணைப் பகுப்பு அமைந்துள்ளது என்பது தெளிவு.

பால் வேறுபாடு :— திராவிட மொழிகளில் பால் இலக்கண வேறுபாடு மூன்று வேறுபட்ட வகைகளில் அமைந்துள்ளதைக் காணலாம். அவை பின் வருமாறு

முதல் வகை

ஒருமை

ஆண்பால் அவன்	} பலர் பால் (ஆண்பால், பெண்பால்) அவர்		
பெண்பால் அவள்			
ஒன்றன்பால்	அது	பலவின்பால்	அவை

இரண்டாம் வகை

ஆண்பால்	அவன்	பலர்பால் (ஆண்பால், பெண்பால்)	அவர்
ஒன்றன்பால்	அது		
(ஆணல் பால்=பெண்+ஒன்றன்)		பலவின்பால்	அவை

மூன்றும் வகை

ஆண்பால்	அவன்	பலர்பால் (ஆண்பால்)	அவர்
ஒன்றன்பால்	அது	பலவின்பால் (ஆணல்பால்)	
(ஆணல்பால் = பெண் + ஒன்றன்)			அஃவ

முதல்வகை வேறுபாடு தமிழ், மலையாளம், கன்னடம், துளு, படகா, கோதா, குடகு ஆகிய மொழிகளில் காணப் படுகின்றது. ஆனல் கோதா, குடகு மொழிகளில் எண் வேறு பாடு இல்லை. அத் (கோதா), அதி (குடகு) ஆகிய சொற்களே அது, அவை என்னும் இரு பொருளிலும் வழங்குகின்றன.

இரண்டாம் வகை வேறுபாடு நடுத்திராவிட மொழியான தெலுங்கிலும், வட திராவிட மொழிகளான குரூக், மால்டோ காணப்படுகின்றது. குரூக், மால்டோ ஆகிய மொழிகளில் அஃறிணையில் ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை. குரூக் மொழியில் அஃறிணைச் சுட்டுப் பெயரில் எண் வேறுபாடு உள்ளதேயன்றி வினையில் காணப்படவில்லை.

மூன்றும் வகை வேறுபாடு தெலுங்கு, துளு ஆகிய இரு மொழிகள் ஒழித்து எல்லா நடுத் திராவிட மொழிகளிலும் காணப்படுகின்றது.

தோடாவும் பிராகுயும் :— இவ்விரு மொழிகளிலும் பால் வேறுபாடு காணப்படவில்லை. தோடாவில் ஒரு சொல்லே உயர்திணை ஒருமையிலும் அஃறிணை ஒருமையிலும் வழங்குகின்றது. பிறிதொரு சொல் உயர்திணைப் பன்மையையும் அஃறிணைப் பன்மையையும் குறிக்கின்றது. எனவே பெயரில் எண் வேறுபாடு காணப்படுகின்றது. ஆனால் படர்க்கையில் ஒரே வினைச் சொல்லே ஒருமையிலும் பன்மையிலும் வழங்குகின்றது. தோடாவில் வினையில் எண் வேறுபாடு காணப்படவில்லை.

தோடாவில் காணப்படுகின்ற இவ்வமைப்பு பழைமையானது என்று கருத முடியாது. ஏனெனில் தோடாமொழி பழந் தமிழோடு தொடர்புடையது என்று அறிஞர் பலரால் ஆய்ந்து முடிவிடப் பட்டுள்ளது. எனவே முந்திய நிலையில் முதல் வகையான பாகுபாடு இதில் அமைந்திருக்கலாம்,

பிராகுய் மொழியில் தொடக்கத்தில் அஃறிணைப் பன்மையில் வழங்கிய இடப் பெயர்களே பின்னர் உயர்திணைப் பன்மையிலும் வழங்கி இருக்கலாம் என்று கருத இடம் உள்ளது,

எ — டு. அவய் (அவ்), இவய் (இவ்), உவய் (உவ்)

பிராகுய் மொழியில் படர்க்கை வினையில் எண் வேறுபாடு காணப்படுகின்றது. மேலும் படர்க்கை வினையில் காணப் படுகின்ற ரகரவீறு மூலத் திராவிட மொழியின் — அர் விகுதி யோடு தொடர்புடையதாகத் தோன்றுகின்றமையால், முந்திய நிலையில் இம் மொழியில் வட திராவிட மொழிகளோடு தொடர் புடைய ஒருவகை பால் வேறுபாடு அமைந்திருக்கலாம் என்று கருத இடமுண்டு.

வினையில் எண் — பால் வேறுபாடு. கோதா, குடகு, குரூக், மால்டோ ஆகிய மொழிகளில் அஃறிணைப் படர்க்கை வினைகளில் எண் வேறுபாடு இல்லை. தமிழிலும் அஃறிணையில் எதிர்காலப் படர்க்கை வினைகளில் எண் வேறுபாடு இல்லை. எ—டு அது பறக்கும், அவை பறக்கும். இவ்வாறு எண் வேறுபாடு இல்லாத இயல்பு திராவிட மொழிகளின் இரண்டு குழுக்களில் காணப்படுதலும், பன்மைக்குரிய குறிப்பிட்ட ஒரு உருபனை (morpheme) எல்லா மொழிகளிலும் காண்பதற்கு இயலாதிருத் தலும் மூலத் திராவிட மொழியில் அஃறிணையில் எண்வேறுபாடு இன்மைக்குச் சான்றுகளாகக் கொள்ளுதல் இயலும்.

பழந் தமிழில் நிகழ்கால வினைகளிலும், இடைக்கால நிகழ்கால — எதிர்கால வினைகளிலும் பலர்பால் அல்லாத ஏனைய பால்களில் எண் — பால் குறியீடு இல்லாதிருத்தலும் இவண் குறிப்பிடத்தக்கது. [2]

எ—டு. அவன் செய்யும் அவள் செய்யும், அது செய்யும், அவை செய்யும். தெலுங்கு மொழியின் எதிர்கால வினைகளில் எண்—பால் வேறுபாடு காணப்படவில்லை. எ—டு 1. வாடு (அவன்) சேயுநு, 2. அதி (அது, அவள்) சேயுநு, 3. அவி (அவை) சேயுநு.

இச் செய்திகள் மூலத் திராவிட மொழியில் படர்க்கையில் உயர்திணைப் பலர்பால் அல்லாத பிற பால்களில் எண்–பால் காட்டும் விகுதிகள் அமையவில்லை என்று கருத இடந் தருகின்றன. பிற்றை நாளில் தன்மை, முன்னிலை வினைகளை ஒட்டி, ஒப்புமையாக்கத்தால் படர்க்கை வினைகளிலும் பால், எண், இடம் குறிக்கும் விகுதிகள் வழங்கி இருக்கலாம்,

மலையாள மொழியில் மூவிட வினைகளிலும் எண் — பால் வேறு பாடு இல்லை.

எ — டு	அவனு வரும்	ஞான் வரும்
	அவளு வரும்	ஞங்ஙள் வரும்
	அவரு வரும்	நீ வரும்
	அது வரும்	நிங்ஙள் வரும்
	அவ வரும்	

மூலத் திராவிட மொழியில் பால்வேறுபாடு: முதல் வகையான பால் வேறுபாடே மூலத் திராவிட மொழியில் அமைந்திருந்தது என பரோ, பட்டாச்சாரியா என்னும் அறிஞர்கள் கருதுகின்றனர். [3] அவ்வாறிருப்பின் ஒருமையில் தனித்து வழங்கிய பெண்பால் எக்காரணத்தால் நடுத் திராவிட மொழிகளிலும் வட திராவிட மொழிகளிலும் ஒன்றன் பாலுள் இணைந்தது என்பதற்குக் காரணம் கூறுதல் அரிதேயாகும் மேலும் எல்லாத் திராவிட மொழிகளிலும் பன்மையில் இருவகை வேறுபாடு அமைந்திருத்தலும் மூலத் திராவிட மொழியில் ஒருமையில் மூவகை வேறுபாடு (ஆண், பெண். ஒன்றன்) இருந்திருக்கலாம் என்பதை உறுதி செய்யவில்லை. எனவே டாக்டர் கிருட்டிணமூர்த்தி அவர்கள் முதல் வகையான பால் வேறுபாடு மூலத் திராவிட மொழிக்குரிய தன்று என்று குறிப்பிடுகின்றார். [4]

இரண்டாம் வகையான பால்வேறுபாடே மூலத்திராவிட மொழியில் அமைந்து பின்னர் தென் திராவிட மொழிகளிலும் துளுவிலும் ஆண்பால், ஒன்றன்பால் இவற்றினின்று வேறு பட்ட பெண்பால் காலப் போக்கில் அமைந்திருக்கலாம் பெண்ணைக் குறிக்கும் ஒரு தனிச் சொல்லே பின்னர் திரிந்து பெண்பால் குறியீடாக (marker) வழங்கத் தலைப்பட்டது எனலாம்.[5]

நடுத் திராவிட மொழிகளில், ஒருமையில் பெண்பால் அஃறிணையுடன் இணைக்கப்பட்டிருந்ததால் அதையொத்துப் பன்மையிலும் காலப்போக்கில் ஆண்பாலிலிருந்து பிரிக்கப்பட்டு அஃறிணையில் சேர்க்கப்பட்டிருக்கலாம். நடுத் திராவிட மொழி களில் பெயர்ச்சொல்லில் தனிப்பட்ட பெண்பாற் குறியீடுகள் அமைந்திருத்தலும் இவண் கருதத்தக்கது.

எனவே தொடக்க நிலையில் ஒருமையில் அஃறிணையிலும் பன்மையில் உயர்திணையிலும் அமைந்து வழங்கிய பெண்பால் காலப்போக்கில் தென் திராவிட மொழிகளிலும் துளுவிலும் ஒருமையில் உயர்திணையில் தனிப்பட்ட ஒரு பாலாகவும், நடுத் திராவிட மொழிகளில் அஃறிணைப் பன்மையுடனும் இணைந்தும் வழங்கலாயிற்று.

பெண்பால் ஆக்கமும் வளர்ச்சியும் தெலுங்கிலும் வட திராவிட மொழிகளிலும் காணப்படுகின்ற பால்வேறுபாடே மூலத் திராவிட மொழியில் அமைந்திருந்ததாயின், பெண்பால், ஒருமையில் அஃறிணையிலும் (ஒன்றன் பாலிலும்) பன்மையில் உயர்திணையிலும் (பலர் பாலிலும்) சேர்த்துக் கொள்ளப்பட்டது என்பது தெளிவு. காலப்போக்கில் பெண்பாலை அஃறிணையில் சேர்த்துக்கொள்வது பொருத்தமற்றது என்று கருதியிருக்கலாம். எனவே தென் திராவிட மொழிகளில் ஒருமையில் ஆண்பால், ஒன்றன்பால் இவற்றினின்று வேறுபட்ட பெண்பால் என்ற பகுப்பு அமைத்துக் கொள்ளப்பட்டது. பெண்பாலைக் குறிக்க, மூலத்திராவிடமொழியில் தனிச்சொல்லாக வழங்கிய 'ஆளீ' (= பெண்) என்பது உரு திரிந்து ஒட்டாக (suffix) வழங்கிய 'அள்' என்பதனைப் பயன்படுத்தி உள்ளனர் என்பதும் இவண் குறிப்பிடத்தக்கது.[6]

பெண்பால் பகுப்பினைத் தென்திராவிட மொழிகளில் உள்ள சுட்டுப்பெயர்களும், பெயரடை - பெயரெச்சம் அடியாகத்

தோன்றி பெயர்களும், வினைமுற்றுக்களும் தெளிவாகக் காட்டி நிற்கின்றன. எ—டு. அவள், நல்லவள், வந்தவள், வந்தாள். பெண்பாலை அஃறிணை ஒருமையில் அடக்கிக்கொள்ளும் நடுத் திராவிட மொழிகளில் பெண்பால் உறவின் முறைப்பெயர்கள் பெண்பாலைக் குறிக்கும் தனிப்பட்ட விகுதிகளோடு வழங்கத் தலைப்பட்டுள்ளன. மேலும் நடுத் திராவிட மொழிகளின் கோலாமி-பர்ஜி துணைக்குழுவின் மொழிகளில் இரண்டு, மூன்று, நான்கு ஆகிய எண்ணுப் பெயர்களிலும் பெண்பால் பகுப்பு காணப்படுகின்றது.

எ—டு.	கோலாமி	பர்ஜி	நாய்க்கி	கடபா
இரண்டு. பெண்	ஈரல்	இரல்	இர	இரல்
மூன்று பெண்	முயல்	முயல்	முய்யா	—
நான்கு பெண்	நல்லவ்	—	நெலல்	..

இவையெல்லாம் திராவிட மொழியில் பெண்பால் வளர்ச்சிபெற்ற மையைத் தெளிவுபடுத்துகின்றன.

நடுத் திராவிட மொழிகளில் பெண்பால் உறவின் முறைப்பெயர்கள் எல்லா நடுத் திராவிட மொழிகளிலும் பெண்பால் உறவின் முறைப் பெயர்கள் பல பெண்பாலுக்கே உரிய சொல்லாக்க உருபனுடன் அமைந்து வழங்குகின்றன. இவ்வுருபன் 'ஆன்' என்னும் சொல்திரிந்து ஆகியதாதல் வேண்டும். 'ஆள்' என்னும் சொல் மூலத் திராவிட மொழியில் பெண் என்னும் பொருள் உடையதாகும்.

உறவின்முறைப் பெயர்களில் பெண்பால் விகுதி அமைந்து வழங்குதல் நடுத் திராவிட மொழிகளில் அமைந்த சிறப்பியல்பாகும்.

எ—டு.	தெலுங்கு	கோலாமி	நாய்க்கி	பர்ஜி
மருமகள்	கோடலு	கொரல்	கொரள்	கொடல்
தங்கை	செலியலு	—	—	சாலல்
மாமி		பொதல்	பொதள்	பொதல்

	கடபா	கோண்டி	கோண்டா	மூலத் திராவிடம்
மருமகள்	கொடல்	கோரியாட்	...	கோழாள்
தங்கை	சேலல்	சேலாட்		சேல் - ஆள்
மாமி	போதல்	போதாட்	...	போத்-ஆள்

இவ்வெடுத்துக் காட்டுக்களுள் அல், அள், ஆள் (ஆட்) என்னும் விகுதிகள் அமைந்திருத்தலைக் காணலாம். ஆள்> அள்> அல். ஆ> அ; ள்> ல்> ள்> ட் ... ஆகிய மாற்றங்களைக் காண முடிகின்றது.

திராவிட மொழியில் எண் வேறுபாடு திராவிட மொழிகளில் ஒருமை, பன்மை என்ற இரு எண்களே உள்ளன. உயர்திணைப் பன்மையில் பெரும்பாலும் ரகரவிறுதி எண் குறியீடாக அமைகின்றது. கோதா, தோடா, பிராகுய ஆகிய மொழிகளில் இவ்வேறுபாடு காணப்படவில்லை. தெலுங்கில் பழங்கால மொழியிலும் தற்காலத்தில் இடப்பெயர், எண்ணுப் பெயர்களிலும் மட்டுமே ரகரவிறுதி காணப்படுகின்றது தற்காலத் தெலுங்கில் அஃறிணைப் பன்மை உருபன்-லு தான் உயர்திணையிலும் வழங்குகின்றது. இக்காலத் தமிழில் அஃறிணைப் பன்மை உருபன்-கள் உயர்திணைப் பெயர்களில் பன்மை விகுதிகளோடு இணைந்தும், நேரடியாக இணைந்தும் வழங்குகின்றது.

எ...டு. அவர்கள், அரசர்கள், தம்பிகள், தங்கைகள்.

அஃறிணைப் பன்மையில் மிகுதியும் ..கள், ...ள், க் என்பவை விகுதிகளாக வழங்குகின்றன. கள் விகுதி தென் திராவிடக் குழு மொழிகளிலும் நடுத்திராவிடக் குழுவின் கோலாமி பர்ஜி துணைக் குழுவிலும் காணப்படுகின்றது. ...ள் விகுதி துளு, தெலுங்கு ஆகிய மொழிகளிலும் கோலாமி...பர்ஜி துணைக் குழுவிலும் வழங்குகின்றது. ...க் பிராகுய் மொழியிலும் கோண்டி — கோண்டா துணைக் குழுவில் மட்டுமே வழங்குகின்றது. பழந்தமிழ் இலக்கியத்தில் –கள் வடிவம் வழங்கியுள்ளமையால் அஃறிணைப் பன்மையின் பழமையான வடிவம் அதுவாகவே இருத்தல்வேண்டும் என்று கருதுதல் பொருந்தும்.

தென் திராவிட மொழிகளில் அஃறிணை பன்மைப்பெயர்கள் பன்மை உருபனை ஏற்று வழங்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வட திராவிடக் குழுவில் (குருக்-மால்டோ) பன்மை விகுதி காணப்படவில்லை ஆனால் நடுத் திராவிடக் குழுவில் மட்டும் அஃறிணைப் பன்மை விகுதி கட்டாய நிலையில் வழங்குகின்றது. இருவேறு துணைக்குழு மொழிகளில் காணப்படும் இயல்பே பழந் திராவிட மொழியில் அமைந்திருக்கலாம் என்று கருதுதல் பொருந்தும்.

முடிவுரை ;- திராவிட மொழிகளில் தற்காலத்தில் அமைந்துள்ள பால் வேறுபாடு, எண் வேறுபாடு மூலத் திராவிட மொழியில் எண்-பால் வேறுபாடு அமைந்திருந்த நிலை ஆகியவை இக்கட்டுரையின்கண் ஆராயப்பட்டுள்ளன

அடிக்குறிப்புக்கள்

1. தொல்காப்பியம் சொல்லதிகாரம் - 160
   நன்னூல் - 261

2. தொல்காப்பியம் சொல்லதிகாரம் 227—நன்னூல் 348

3. Burrow T, and Bhattacharya, S.,
   The Parji Language, P. 9

4. Krishnamurti, Bh, Telugu Verbal Bases, P. 236

5. Jules Block, The Grammatical Structure of Dravidian Languages, P. 5.

   Emeneau, M. B., Kolami, A. Dravidian Language, P. 148.

6. Burrow. T. and Emeneau, M. B.,
   A Dravidian Etymological Dictionary, 342

   ஆளீ ; ஆட்டி = பெண்

7. –கள், –ள் ஆகியவை இரண்டும் சூழ்நிலை அடிப்படையில் துணை நிலை வழக்கில் (Complementary distribution) அமைந்துள்ளன. -கள் குறுகிய உயிர்பெற்ற ஓரசைப் பெயர்களிலும் 'கிளி' போன்ற அமைப்பினை உடைய ([மெய்] உயிர், மெய், உயிர்) சொற்களிலுமே வழங்குகின்றது, -ள் பிற இடங்களில் வழங்குகின்றது.

   Subramanyam. P. S. Journal of the Annamalai University Volume XXVI P. P. 96 - 99.

தமிழ்க்கூத்தமைதி - (கட்டுரை - எண் - ரு)

பண்ணாராய்ச்சி வித்தகர், ஏழிசைத் தலைமகன்,
குடந்தை திரு. ப. சுந்தரேசன்

தமிழ்க்கூத்தியர் மரபில் வந்த ஒரு பெண்ணுக்கு, ஆடல் பயிற்றுவிக்கும் போழ்து, இயல்பானே அப்பெண், அக்கலை, அவளால் விளங்குதற்குரிய பெற்றிமை பெறுதல் முதலிய பலவற்றையும் உளத்தடக்கி, முதன் முதல் அப்பெண். அதற்கான அழகினைப் பிறப்பிலேயே பெற்றவளாயிருத்தலை அறிதல் வேண்டுமாம். அதற்கேற்ப அவள் தாய், தந்தை, எவ்வகையிலும் திருவுடையராய் இருத்தல் வேண்டும். அக்கருத்தில், முன்னறிவினராய்த் திகழ் வாராம் பழங்காலத்தில் அக்குலத்தோர். அவ்வழக்கு நெடுங்காலம் தொடர்ந்து வந்து மிகவும் சிதைவுற்றது.

அத்தகு ஒரு பெண்ணுக்குப் பிறப்பிலமைவது அழகு. பின்னர் பயிற்றுவிப்பது, பாடலும், ஆடலும் என்பதே. இம்மூன்றும் சிறப்பாகப் பெறுவதற்கு அப்பெண்ணும் பிறப்பும் குலனும், முன்னர் வினையும், பெற்றிருத்தல் வேண்டும்.

இச்சீரிய நாடகக் கணிகைக் குறிப்பை, ஆடலும், பாடலும், அழகும் என்றிக் கூறிய மூன்றில் ஒன்றுங் குறைபடாமல், என்றார் இளங்கோ வேந்தர். இவ்விடத்தே அரும்பதவுரையாசிரியர், கூத்தும், பாட்டும், அழகும் என்று சொல்லப்பட்ட இம்மூன்றினுள்ளும் ஒன்றும் குறைபடாமல், எனப்பெரிதும் அடக்கிக் கூறுகிறார்.

கொஞ்சுங் கிளிமொழிபோற் கூவும் குயிலிசை போற்
செஞ்சொலியல் வல்லவுருச் சித்திரம் போல்—வஞ்சியரில்
மேலாய்க் குடிப்பிறப்பு மேலாய. செல்வமிகு
மாலாமின் னாட்டுவிக்கு வாம்.

என்று மிகப்பிற்காலத்தில் அறம் வளர்த்தானியற்றிய பரதச் (சங்கிரகம்) சுருக்கமும் பொதுப்படக் கூறுகிறது. இவற்றின் நுண்கருத்துக்கள் யாதோவெனில்? பற்பலவாம். மிகமிகப் பற்பலவாம்.

தமிழகத்து ஆடற்கலை, பரதம் என்ற சொல்லானே. குறித்த காலத்தைப் பற்றியும் இக்கால நற்றமிழாய்வாளர் நன்கே

சிந்தனை செய்வார்களாக. அச்சொல்பற்றிய முதற்சிந்தனை இவ்வாறே அமைதல் வேண்டும். இவையும் நம் தமிழிலக்கிய வழக்கு முறையைப் பற்றியதேயாம்.

பரதரும், பரத்தியரும் நெய்தல் நில மக்கள். பரதர் மலிந்த பயங்கெழு மாநகர். பரதர் — கடலோடிகள். அதாவது வணிகர். அரசகுமரரும், பரத குமரரும் என்ற விடத்து, அரச குமரருக்குச் சம நிலையில் பரதர்கள் புரவியர், களிற்றினர், தேரினராய்ச் செல்வராம். வன்பரதர் பாக்கம், என்றெல்லாம் அறியுமிடத்து தமிழகத்துப் பரதர் என்பார் சிறந்த வணிகர்கள் என்பது பெறப்படும். இவர்கள் கடல் வணிகர்கள். பரதர் வேறு, பரதவர் வேறு, இத்தகு தமிழ்நாட்டுப் பரதர்கள் தந்நாட்டு ஆடற் கலையை நன்கறிந்தவர்கள் அவர்களில் ஒருவர் வடபுலம் சென்று வாணிபத்தின் பொருட்டுத் தங்கிய பரதரே, சிறந்த முனிவரானர். அவர் வேறேதும் எழுத இயலாத வராய் தந்நாட்டிற்சிறந்து, கலையாக விளங்கும் ஆடற்கலைக்கு இலக்கணம் வரைந்து மகிழ்ந்தார். அதுவே பரத சாத்திரம். அந்நூல் வழக்கும், இலக்கியமும், பயில்வாரும் இந்தியப் பெரு நாட்டில் தென்னகத்தே இருந்தன. இருந்தனர் என்பதே வெளிப் படை. இதன் சான்றுகளை சென்ற ஆடிப் பொழிலின் 118-ஆம் பக்கத்தினை மீண்டும் படித்தறிந்துணர்க.

பர, பரப்பு, பரத்தல், உலகெங்கும் பரந்த நிலையில் வணிகம் புரிவார் பரதர். இக்கருத்தினைவைத்தே நாம் கோவலனைப்பற்றி அறிதல் வேண்டும். பரதன், கோவலனது முற்பிறப்பின் பெயர் என்ற குறிப்பினையும் ஓர்ந்தறிதல் வேண்டும்.

இக்கருத்துக்கள் பல்லாற்றானும் இக்காலத்திய நம்மனோ ரான் அறியப்படுவது பரத சாத்திரம் என்ற ஆடற்கலைநூல், தமிழ் நாட்டிற்கேயுரிய வழக்கு முறைமையினை. கூத்தநூல் இயல்பை, எடுத்து வடமொழியிற் கூறப்பெற்றது என்பதும். அஃதும் தமிழ்நாட்டுப் பரதரே வடபுலம் சென்று வணிகத்தின் பொருட்டுத் தங்கி இருந்த காலத்து அம்மொழியில் எழுதிவைத்தது என்பதும் ஒரேவழியான் துணிதல் என்பதாம். மொழிபற்றி நினைத்துப் பாராட்டுதலும், அன்றி ஒதுக்கிவிடுதலும் பொருந்துவதன்று. பயிற்றுவிக்கத் தொடங்குதல், அரங்கேற வைத்தல் என்பதை ஏழாண்டியற்றி ஓரீராண்டில். என்பதே இளங்கோ கூறுவது ஏழாண்டு இயற்றி, மையுண் கண்ணி மடந்தை மற்றவளை ஐயாண்டு நிரம்பிய பின்றைக் காண்போர் காண அரங்கிற் சிரமம் இருபொழுது ஏழாண்டியற்றுவித்து இப்படியாற் பன்னீ ராண்டு பிராயம் புக்கபின்பு, என்பது அரும்பதவுரை.

ஆடற்கலை பயிலும் பெண்ணிற்கு, ஐயாண்டில் தண்டியம் பிடிப்பித்து ஏழாண்டு இயற்றுவித்து பன்னீராண்டில் அரங்கு ஏறச் செய்தல் கூத்தநூல் கூறும் பெருவழக்காம்.

"பண்ணியம்வைத் தானைமுகன் பாதம் பணிந்து நாட்
புண்ணிய வோரை புகன்றன கொண்—டெண்ணியே
வண்டிருக்குங் கூந்தன் மடவாலை யையாண்டில்
தண்டியஞ்சேர் விப்பதே சால்பு."

"வட்டணையுந் தூசியு மண்டலமும் பண்ணமைய
எட்டுட னீரிரண் டாண் டெய்தியபின் - கட்டளைய
கீதக் குறிப்பு மலங்கார முங்கிளரச்
சோதித் தரங்கேறச் சூழ்"

"நன்னர் விருப்புடையோள் நற்குணமு மிக்குயர்ந்தோள்
சொன்னகுலத்தாலமைத்த தொன்மையளாய்ப்
— பன்னிரண்டாண்
டேய்ந்ததற்பின் ஓடலுடன் பாடலழ கிம்மூன்றும்
வாய்ந்தவரங் கேற்றல் வழக்கு."

எனவும் கூறினர் பரதசேனாபதியார் என, அடியார்க்கு நல்லார் எடுத்துக் காட்டியிருப்பதறியலாம். பரதசேனாபதி என்றாலே பண்டைய பரதர் குலத்தில் போர்ப்பயிற்சியுடைய வீரர்களும் இருந்து, அவர்களில் சேனையர் பலரிருந்து அவர்களின் ஒரு தலைவர் என்பதும் போதரும். பரதர். சேனைக்கும் தலைவரே. அவர். ஆடற்கலைக்கு இலக்கணம். அஃதும் முதற் பயிற்சி பற்றி வெண்பாவாற் பாடியமைத்துள்ளார் என்றால் பரதர் யாவர் என்பதும், ஆடற்கலைக்கும் அவர்களுக்கும் உள்ளதோர் தொடர்பு பற்றியும் ஒல்லும் வகையான் உன்னித்தறியலாமன்றோ. பரதசேனாபதீயம் என்ற ஒரு நூலினை அதிவாயிலார் என்ற முத்தமிழ்ப் புலவரொருவர் இயற்றினார் என்பர். போர்ப்பயிற்சி உடைய சேனைத் தலைவர்க்கும் ஆடற்கலைக்கும் யாதோதான் தொடர்பு எனில்? மன்னர், பகைவரது ஆற்றலையழித்து வென்று வெற்றிப் பாசறையில் தங்கி மகிழுங்காலத்து, ஆங்கு நிகழும் வெற்றிக் கூத்து புகழ்க் கூத்து எனும் கூத்து முறைமைகளை சேனைத் தலைவர்களே வரையறை செய்து வீரர்களிலேயே பல கூத்தர்கள் இருந்து ஆடப் பெறுதல், மிகப் பழையதோர் வழக்கென்பதனை நன்கே உணரப் பெறுதல் வேண்டும். ஆகவே ஆடற்கலை வீரர்களுக்கும், அரசர் பின்னோராய வணிகப் பெருமக்களுக்கும், பெருந்தொடர்

யோடு இருந்ததனை அறியலாம் இவையாவும் பெரும்பாலும் ஆண்களுக்குரிய ஆடற்கலையாம்.

அத்தகு வணிகர்களான பரதர்களே எளிமையும் அழகும், விழாக் காலங்களில் விளங்க வேண்டி சிறந்ததொரு ஆடற் கலையைத் தனியே வகுத்து உரியவானவர் மகளிரின் தொழின் முறைக்கேற்ப இலக்கணத்தானும் நெடுங்காலம் உணரத் தக்கவாறு எழுதிப் பாதுகாத்தனர். அந்நூல் வழி எழுந்ததே பரதம், அதனைத் தொழின் முறையாக் கொண்டவர் தமிழ்க் குலத்து வானவர் மகளிர் என்றார் இளங்கோ வேந்தர்.

ஆடற்கலையின் வல்லதொரு பெண்ணின் தோற்றத்தைப் பிற்காலத்தில் வீரராகவய்யா என்பார் "மன்னர் முதல் மூன்று குலத் துதித்தவள், சிவந்த நிறமும் அழகும் உள்ளவள், அன்னம் போன்றவள், இத்தகையவள், அரசனது சிம்மாசனத்தின் முன்னே பத்து முழம் விட்டுக் கீழ்த் திசையில், திரையை நீக்கி மதிகலை போன்றும் பூத்த வஞ்சிக்கொடி போன்றும், கருமேகம் திறந்து மின்னல் வெளிப்பட்டது போன்றும் விளங்கத் தோன்றுவாள் எனும் கருத்தில்,

மன்னர் முதல் மூன்று குலத் தொருத்தியாய்ச்
சிவந்தழகாய் வண்மை காட்டும்
அன்னமன்னாள் வேந்தனரி யாசனமுன்
ஐயிரட்டி முழத்துக் கப்பால்
மன்னுமெழி னியைநீக்கி மதிகலை போல்
மலர்பூத்த வஞ்சி போல
மின்னுருண்ட கருமேகம் திறந்துவெளிப்
பட்டதென விளங்கித் தோன்றல்"

எனப் பாடினார்.

தமிழகத்தில் பழந்தமிழ் மக்களிடம் தனித்த நிலைமையில் விளங்கிய மிகப் பழங்காலத்திய வழக்கு முறைமை, எதனையும் அகமும், புறமுமாகவும், பொதுவும், சிறப்புமாகவும், அறிந்துணர்வது என்பதனை தமிழ் நூல்கள் யாவற்றினும் காணக்கிடப்பதாகும். இம் முறைமையில் தமிழ்க் கூத்தின் அமைதியும்,

கூத்து

அகம், அகக்கூத்து = புறம், புறக்கூத்து
பொது, பொதுகூத்து = சிறப்பு, சிறப்புக்கூத்து

எனவே முதலமைதி பெற்று. ஒவ்வொன்றும் பல்வேறு வகையான பிரிவு நிலையெய்தும், இக்கூத்துக்களும் ஆண்பாற் கூத்துக்கள் பெண்பாற் கூத்துக்கள் எனவும் பிரிவு பெறும் இவையும் பிறவும் இரு வகைக் கூத்து எனப் பொதுப் படக் கூறப்பெற்றன.

அத்தகு கூத்துக்கள், எத்துணைப் பிரிவெய்திய போழ்தும் வேந்தன் முன்னர் மட்டும் ஆடத்தகுந்தன இன்னின்னவை என்பதும், அவை சிறப்பு வகையைச் சார்ந்ததென்பதும் பொதுவாக மக்கள் முன்னர் அஃதும் பல்வேறு மக்கள் காணவும், ஒரு சில மக்கள் மட்டுமே காணவும் ஆடத் தகுந்தன இன்னின்னவை என்பதும் நன்கே வரையறை செய்யப் பெற்றமையால், எல்லாக் கூத்துக்களையுமே வேந்தன் முன் ஆடப்பெறுவதனை வேத்தியல் எனவும் மக்கள் முன்னர் ஆடப்பெறுவதனை பொதுவியல் எனவும் தனிப்படுத்திக் குறித்துணரப் பெற்றது. மக்கள் முன்னர் ஆடப்பெறும் கூத்துக்கள் பொது வகையைச் சார்ந்ததாம்.

வேத்தியல் வகைக் கூத்தினை எல்லா மக்களும் காணுதல் அரிது. பொதுவியற்கூத்தினையும், ஒரோவழி மக்களும் சிற்சில மக்களும் உரிய விடங்களில் ஆங்காங்கு தனித்தனியே காணப் பெறுதலே வழக்கு. இவற்றினுள்ளடங்கிய கூத்துவகைகளோ பற்பல, அவை ஒவ்வொன்றும் தனித்தனி ஒவ்வொன்றிலிருந்தே பிரிவு பெறும். அவை, வசை எனவும், புகழ் எனவும், வரி எனவும் வரிச்சாந்தி எனவும், சாந்தி எனவும், விநோதம் எனவும், இயல்பு, திரிபு எனவும், தேசி எனவும், வடவர் முறையை ஆரியம் எனவும், தமிழர் முறையை தமிழ் எனவும் பிரிவு படுத்தி, இன்னும் பல்வேறு வகையானும் அறியப் பெற்றதாகும்.

பொதுவாகவோ, சிறப்பாகவோ கூத்துவகைகள் எத்துணைய வாயினும் அவற்றிற்கெல்லாம் மக்கள் பல்வேறு முறைமையில் வாழ்ந்த பெற்றிமையின் அடிமணையில் எழுந்து விளங்கிய வழக்குமுறைமை என்பவற்றைப் பொறுத்ததே எல்லாக் கூத்துக்களின் இயல்பென்பது நன்கறிதல் வேண்டும். அவையும் இயல்பாகவும் திரிபாகவும் அமைவது வெளிப்படை.

சிலப்பதிகார அரும்பதவுரை, "இருவகைக் கூத்தாவன, என, **தேசி மார்க்கம்** எனவிவை; மார்க்கம் என்பது வடுகின் பெயரே, இவற்றது இலக்கணமாவது, அறுவகை நிலையும்...... ஆகுமென்ப. இவை ஈங்குரைப்பிற் பெருகும் விரிந்த நூலிற் கண்டு கொள்க" எனக்கூறிற்று.

அடியார்க்கு நல்லாருரையோவெனில்? "இருவகைக் கூத்தாவன, வசைக்கூத்து, புகழ்க்கூத்து, வேத்தியல் பொதுவியல் வரிக்கூத்து, வரிச்சாந்திக்கூத்து, சாந்திக்கூத்து, விநோதக் கூத்து, ஆரியம், தமிழ், இயல்புக்கூத்து, தேசிக்கூத்தெனப் பலவகைய இவை விரிந்த நூல்களிற் காண்க. எனக்கூறி, சிலப்பதிகாரம் பற்றிய வகையில் மட்டும் ஈண்டு இருவகைக் கூத்தாவன **சாந்தியும்**, விநோதமும், என எடுத்துக்கொண்டு, என்னை? அவைதாம், **சாந்திக்கூத்தும், விநோதக்கூத்தும். என்றாய்ந்துற வகுத்தனன் அகத்தியன்றனே.** என்றாராகலின்" எனக்கூறி ஒவ்வொன்றாய் விளக்கம் தந்து செல்கிறது.

இளங்கோ வேந்தரோ, எல்லாவற்றையும் உணர்ந்து உள்ளடக்கி **இருவகைக்கூத்து** எனவே கூறுகிறார். அவையும், பலவகைப்படும் எனுங்கருத்தில், ஆடல் ஆசிரியனைப் பற்றிக் கூறும் பொழுது.

> இருவகைக் கூத்தின் இலக்கண மறிந்து
> பலவகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்து,

எனக் கூறியிருப்பதனை உணர்வோமாக.

கையறவு

திருவாளர் அ. வீரைய்யா வாண்டையார் அவர்கள் 17—9—70 அன்று இறைவன் திருவடி நிழலை அடைந்தார்கள். அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் ஒரு பெரு நிலக்கிழாராகத் திகழ்ந்தார்கள். நற் பண்புடைய தமிழ்க்குடி மகனுவார் பல அறக் கட்டளைகளை நிறுவியுள்ளார்கள். உள்ளாட்சித் துறையில் வட்ட, மாவட்ட நிறுவனங்களில் பல ஆண்டுகள் தொண்டாற்றியுள்ளார்கள். நமது கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆயுள் உறுப்பினர். சங்கம் நடத்திவரும் மாணவர் இல்லத்திற்கு நன்கொடை அளித்து உதவியுள்ளார்கள். அவர்களின் இன்னுயிர் இறையடி நீழலில் பேரின்பம் எய்துமாக,

சென்ற இதழ்த் தொடர்ச்சி.

இருங்கோவேளும் நற்குடி வேளாளரும்

(இரு தமிழ்க் குலத்தோரின் தொன்மை தோற்றம் பற்றிய சில கருத்துக்கள்)

திரு. பி. இராமநாதன், பி. ஏ., பி எல்., சென்னை.

[இலண்டன் பல்கலைக் கழகத்தின் "ஆசிய, ஆப்பிரிக்கப் படிப்புக்கள் பள்ளியின் தாளிகை" தொகுதி 32 பகுதி - 2 இல் (1969 சூன் திங்கள்) பக்கங்கள் 323 - 343-இல் வெளிவந்த ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம்]

31. இன்னும் கோட்டையைப் பழுது பார்த்து வருவதற்காக அரசினரால் ஆண்டுக்கு ரூபாய் அறுபது மானியம் தரப்பட்டு வருகிறது. அம் மானியம் முதலில் ஆங்கிலேயருக்கு முன் இச் சீமையை ஆண்டுவந்த தமிழ் மன்னர்களால் தரப்பட்டு வந்ததாகும். 1843-ல் ஈ பி தாமஸ் என்னும் கலெக்டர் அம்மானியத்தை நிறுத்திவிடப் பெருமுயற்சி செய்தார், அவர் மானியம் கொடுப்பதை நிறுத்தி விட்டுச் சென்னை வருவாய்த் துறை ஆயத்துக்கு அது பற்றி எழுதினார். கோட்டைக்குள் பிற ஆண்கள் செல்ல வொண்ணாதிருக்கும் நிலைமை மிக ஆபத்தானது எனக் குறிப்பிட்டு. போக்கிரிகளும், பிற தீயோர்களும் பணம் கொடுத்துவிட்டுக் கோட்டைக்குள் பதுங்கி வாழ இடமளிக்கப்பட்டு அக்கோட்டை இரண்டாவது 'அல்சேஷியா" ஆகி விடுதல்கூடும் என்றார் அவர். எனவே கோட்டைச் சுவரை இடித்துவிட வேண்டும் என்றும், மானியத்தை நிறுத்திவிட வேண்டும் என்றும் அவர் கூறினார். ஆனால் அரசினர், தாமஸ் கூறிய அளவுக்குக் கோட்டையினால் இடுக்கண் நேரும் என ஒத்துக்கொள்ளவில்லை; எனவே மானியத்தைத் தொடர்ந்து கொடுத்துவர ஆணையிட்டனர். கோட்டைக்குள் எந்தக் குற்ற விசாரணை நீதிபதியோ, காவலரோ நுழைய முடியாது ஆகையால் குற்றவாளிகள் தண்டனைக்குத் தப்பி அதற்குள் ஒளிந்து கொள்ள அனுமதிப்பது மிக எளிதாக இருப்பினும் கோட்டை வேளாளர் ஒருபோதும் அவ்வாறு அனுமதி அளித்ததேயில்லை என்று 1916-ம் ஆண்டில் பேட் எழுதுகிறார் [49]

49. பாய்ல் மேற்சொன்ன கட்டுரையில் கூறுவதாவது; "பொதுவான பிறவேளாளரைப்போல கோட்டை வேளாளர் குறு குறுப்பும் சூதும் கொண்டவர்கள் அல்லர்; அமைதியான, பிறருக்குத் தீங்கிழைக்க விரும்பாத இயல்பினர் என்றும், சுறுசுறுப்பும், அடக்கமும் ஆடம்பரமின்மையும் கொண்டவர்கள் என்றும் அவர்களைப பற்றி அவ்வட்டாரத்தில் உள்ளவர்கள் கூறுவர்.

32. நற்குடி வேளாளர் கோட்டை வேளாளர்ஆகிய இருவருடைய சமூக வழக்கங்களிலும் தாய் வழித்தாய முறையின் கூறுகள் காணப்படுகின்றன. பெண் வழியில் இறங்கும் "கிளைகள்" அக் கூறுகளில் ஒன்று. ஒரு கிளையினர். அக் கிளைக்குள் திருமணம் செய்யக் கூடாது; வேறு கிளையினரையே திருமணம் செய்யவேண்டும். தற்பொழுது இவ்விரு குலத்தினரிடையேயும் கீழ்க்கண்ட எட்டுக் கிளைகள் உள்ளன :—

1. தென்னன் கிளை
2. திருமால் கிளை
3. கேரளன் கிளை
4. காளியார் (= காளையார்) கிளை
5. காங்கேயன் கிளை
6. நரையன் கிளை
7. கண் நெரிந்தாள் கிளை
8. திருவேம்புக் கிளை

ஒவ்வொரு கிளைக்குள்ளும் 'பிதிர்' கள் என்னும் அதைவிடச் சிறு பிரிவுகளும் உண்டு (லூயி, டுமாண்ட் Louis Dumont) 1957-ல் வெளியிட்ட "தென்னிந்திய உறவு முறையில் 'மேல்' 'கீழ்' வரிசை முறைப்படி மண முடித்தல்" (Hierarchy and Marriage Alliance in South Indian Kinship) என்னும் நூலைக் காண்க. அது (ஆங்கில நாட்டு) அரசர் மானிடவியல் நிலையம் அவ்வப்பொழுது வெளியிடும் நூல்களில் 12வது நூலாக வெளி வந்தது, 1967ம் ஆணடு கலிபோர்னியா பல்கலைக் கழகம் வெளியிட்ட நூர் யாலமான் (Nur Yalman) என்பார் எழுதிய "போதிய மரத்தடியில்" Under the Bo tree) என்னும் நூலின் 356-ம் பக்கத்தையும் பார்க்கவும்,) தாய்வழிக் கிளைகள் தமிழ்ச் சாதியினர் சிலரிடமே காணப்படுகின்றன. (உதாரணமாகக் கொண்டயங்கோட்டை மறவரிடையேயும் [50];

---

50. எஃப், ஃபாசெட், "கொண்டயங்கோட்டை மறவர்கள்" — 'மானிடவியல் நிலையத்தின் தாளிகை'யின் 33ம் தொகுதியில் (1903) 57—65ம் பக்கங்களில் வெளிவந்த கட்டுரை.

முன்னுள் சிவகெங்கை ஜமீன்தாரியிலும் அதை யொட்டிய மதுரை மாவட்டப் பகுதியிலும் வசிக்கும் அய்யாப் பள்ளரிடையேயும் அம்மாப் பள்ளரிடையேயும் தாய்வழிக்கிளைகள் காணப்படுகின்றன) [51]

33. பொதுவாக ஒருவன் தன் தந்தை கூடப் பிறந்த அத்தையின் மகளேயோ அல்லது தாயுடன் பிறந்த மாமனின் மகளேயோ மணப்பது வழக்கம். இவ்வழக்கம் தற்காலத்தில் வலுவிழந்து விட்டது. பெரும்பான்மையான தமிழ்ச் சாதியினரிடம் உடன் பிறந்தாள் மகளை மணக்கும் வழக்கம் உண்டு. ஆனுல் கோட்டை வேளாளரும், நற்குடி வேளாளரும் பெண்வழிக் கிளைகளைக் கொண்டிருப்பதால் அவர்களிடம் அவ்வழக்கம் இல்லை.[52] பொதுவாகத் திருமணம் மணமகள் இல்லத்திலேயே நடைபெறும். முன்னுளில் மணமகளின் தாயுடன் பிறந்த மாமனும், அம்மாமனுடைய மனைவியும், திருமணத்திற்குச் சம்மதித்தால்தான் திருமணம் நடத்த முடியும். மணநாளன்று தாலியைத் தொடுவதன் மூலம் தனது சம்மதத்தைத் தாய் மாமன் மனைவி (அத்தை) தெரிவிப்பாள். திருமணம் நடைபெறும் போது தாலிகட்டும் நேரம் வரும் வரை தாய்மாமனே (அல்லது அவன் பணியைச் செய்யும் மற்றொருவனே) ஆயிரப்பந்தி என்னும் ஒருவித விளக்கை எரிய வைத்துக் கொண்டே இருப்பான். பட்டணம் படியில் கால்படி அரிசியை ஒரு துணியில் மூட்டையாகக் கட்டி, அப்படிக் கட்டிய மூட்டையின் முடிச்சைத் திரியாகவைத்து அத்திரியின்மேல் நெய்யைச் சிறிது சிறிதாக ஊற்றி எரியச்செய்யும் விளக்கே "ஆயிரப்பந்தி" ஆகும். சில தலைமுறைகளுக்கு முன்வரைத் திருநெல்வேலி மாவட்டம் பெருங் குளத்துச் செங்கோல் மடத்து வேளாளக் குருக்களே நற்குடி வேளாளர் குலத் திருமணங்களை நடத்தி வைத்து வந்தனர். ஆரியக் கலாச்சார ஊடுருவல்

---

51. அகமுடையார் தஞ்சாவூர் மாவட்டத்தில் மிகப் பலராகக் காணப்படுகின்றனர். அவர்கள் மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களிலும் உளர். அவர்கள் மறவர், கள்ளர் ஆகியோரைவிட அதிகமாகப் பிராமணீயத்தால் பாதிக்கப்பட்டவர்கள். எனவே அவர்களிடம் (தாய் வழிக்) கிளைகள் இல.

52. திருச்சிராப்பள்ளி ஆறு நாட்டு வேளாளரும் உடன் பிறந்தாள் மகளை மணப்பதில்லை (எஃப், ஆர். ஹெமிங்வே—" திருச்சினுப்பள்ளி மாவட்ட கெசட்டியர்)

காரணமாகத் தற்காலத்தில் பொதுவாகப் பார்ப்பனர் மட்டுமே புரோகிதராக இருந்து திருமணங்களை நடத்தி வைக்கின்றனர். கோட்டை வேளாளரிடையே மணமகன் தன்னுடைய உறவினரும், மணமகள் உறவினரும், இரு குடும்பத்தாரின் கொத்தமாரும் புடைசூழ மணமகள் இல்லத்திற்குச் செல்வான். அவர்கள் மணப்பந்தலுக்கு வந்ததும் மணமகள் குடும்பத்தாரால் வரவேற்கப்படுவார்கள். பட்டணம் பிராமணப் புரோகிதன் அதன்பின் ஹோமம் வளர்ப்பான். அவன்பிறகு தாலியை வாழ்த்திக் கொத்தமார்ப் பெண்ணொருத்தியிடம் கொடுக்க அவள் அதை மணமகனுடைய அக்காளிடம் கொடுப்பாள். அக்காள் இல்லாவிட்டால் அக்காள் முறையுள்ள வேறு ஒரு பெண்ணிடம் கொடுப்பாள். தாலியைப் பெற்றுக்கொண்ட மணமகனின் அக்காள், வீட்டுக்குள் சென்று உள்ளேயே இருக்கும் மணமகளின் கழுத்தில் தாலியைக் கட்டுவாள். கட்டி முடிந்ததும் மணமகனும் மணமகளும் கணவன், மனைவியராகக் கருதப்படுவர். திருமணங்களிலும், பிற புதுமைகளிலும் விருந்தினருக்குக் கோட்டை வேளாளர் அரிசி, காய்கறி முதலியவற்றைச் சமைக்காமலேயே கொடுத்து விடுவர். பிற சாதியாரைப் போல சமைத்து விருந்திடுவதில்லை.

34. வாரிசு உரிமையைப் பொறுத்தவரை நற்குடி வேளாளரிடையேயும் கோட்டை வேளாளரிடையேயும் உள்ள ஒரு சிறப்பான வழக்கம் என்னவென்றால் ஒருவன் தன்னுடைய மகள் ஒவ்வொருத்திக்கும் ஒவ்வொரு வீடும் (முடிந்தால் வீட்டுடன் கூட நிலபுலன்களும்) (சீதனமாகக்) கொடுக்கவேண்டும் என்பதாகும். திருமணம் ஆகும்பொழுதே தன் மனைவியின் தந்தையால் தன் மனைவிக்குத் தனி வீடு கொடுக்கப்பட்டிருந்தால் மணம் முடிந்தபின் மணமகன் அவ்வீட்டிற்குச் சென்று மனைவியுடன் தனிக் குடித்தனமாக வாழத் தொடங்கி விடுவான் [53]

---

53. திருமணத்திற்குபின் கணவனும் மனைவியும் மனைவி வீட்டில் குடித்தனம் நடத்தும் வழக்கம் தமிழ் நாட்டில் மிகக் குறைவு. முன்னாள் ராமநாதபுரம் ஜமீன்தாரி எல்லைப் பகுதிகளில் வாழ்ந்துவரும் வலசு இடையர், பெண்டுக்கு மேச்சி இடையர் ஆகியோரிடையே மருமகன் மாமனாரோடு வசிப்பான்; மாமனார் சொத்து மருமகனுக்குத்தான் வரும். மகன்கள் பெறுவது திருமணம் ஆகும்வரைப் பெறும் உணவு, உடை, உறையுள் ஆகியவை மட்டுமே (டபிள்யூ. பிரான்சிஸ்: மதுரை மாவட்ட கெசட்டியர் 1906, பக்கம் 96). மனைவி வீட்டில் கணவன்

திருமணச் சமயத்திலேயே தனி வீடு கொடுக்கப்பட்டிராவிட்டால், அது கொடுக்கப்படும் வரை தன் மனைவியின் தந்தை (மாமனார்) வீட்டிற்குச் சென்று மணமகன் வசிப்பான். கோட்டை வேளாளரிடையே மணமான ஒரு பெண் தன் தங்கையருள் யாருக்காவது திருமணம் ஆகும் வரை மட்டுமே தன் கணவனுடன் தன் தந்தை வீட்டில் வசித்து வருவாள் என்றும் மணமகள் தாய் தந்தையரின் குடும்ப வீடு கடைசிப் பெண்ணுக்குத் தரப்படும் என்றும் யீட்ஸ் குறிப்பிட்டார். நற்குடி வேளாளரிடையேயும், தாய் தந்தையர்கள் தாங்கள் சாகும் வரைத் (திருமணமான) தங்கள் மகள்களில் ஒருத்தியின் வீட்டிலேயே வசித்து வருவது வழக்கம். மகன் வீட்டில் வசித்து வரும் தாய் தந்தையரைக் காண்பதரிது. ஒரு பெண் தன் தாய் தந்தையரிடம் பெறும் சீதன நிலம் முதலியவை இறுதியில் அவள் மகள்களுடைய சொத்து ஆகிறது. அவளுக்கு மகள்கள் இல்லாவிட்டால் மட்டுமே அச்சொத்து அவள் மகன்களுக்குப் போகிறது. தந்தையின் சொத்து பிற சாதியினரிடைப்போல மகன்களுக்குச் செல்கிறது. எனினும் தம் தகப்பனின் சொத்துக்களில் பெரும் பகுதி தம் உடன் பிறந்த பெண்களுக்குச் சீதனமாகக் கொடுக்கப் பட்டுவிடும். ஆகையால் மகன்களுக்குச் சிறிதளவு சொத்தே வரும், முன்னாட்களில் ஒரு பெண், குழந்தைகளின்றி இறந்து விட்டால் அவள் தன் பெற்றோரிடமிருந்து சீதனமாகப் பெற்ற சொத்துக்களான நிலம், வீடு ஆகியவையும், அசையும் பொருள்களான நகை, பணம் ஆகியவையும் அவள் பெற்றோருக்கே மீண்டும் உரிமை ஆகி விடும். அவற்றில் அவள் கணவனுக்கு எந்தவித உரிமையும் இராது. சுமார் 1910-இல் நற்குடி வேளாளர் ஒருவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்காடி, பொதுவான இந்துச்சட்ட விதிகளின்படி தனக்குமுன் குழந்தைகளின்றி இறந்துவிட்ட தன் மனைவியின் சொத்துக்களுக்குத் தானே வாரிசு என்று நிலைநாட்டினர். அவ்வழக்கில் தரப்பட்ட தீர்ப்பிற்குப் பிறகு நற்குடி வேளாளர்கள் பெண்ணிற்குத் தரும் சீதனத்தை ஒப்பந்த உடன் படிக்கை மூலமாகவே தருகின்றனர்.

வசிக்கும் வழக்கம் முன் காலத்தில் இலங்கையில் கண்டி வட்டாரங்களில் "பின்ன" என்ற வகைத் திருமணம செய்பவர்களிடம் இருந்து வந்தது. ஆனல் தற்காலத்தில் அவ்வழக்கம் அவ்வளவாக இல்லை (எம் டி. ராகவன், "இலங்கை வரலாறு சமூகம் கலாசாரம் ஆகியவற்றில் இந்தியா", புது டில்லி; கலாசாரத் தொடர்புக்கான இந்தியக் குழு, 1964, பக்கம் 143, அடிக் குறிப்பு)

அவ்வுடன்படிக்கையில், குழந்தைகளின்றி அப்பெண் இறந்து விட்டால் அவளுக்குச் சீதனமாகக் கொடுக்கப்பட்ட சொத்துக்கள் அவள் பெற்றேரையும் (அவர்களின் வழி வரும் பிற வாரிசுகளை யும்) அடைய வேண்டும் என்று குறிப்பிடப்படுகிறது

35. நற்குடி வேளாளர் புலால் உண்பர் என்றும். அவர்கள் சைவ சமயத்தவர் என்றும் 1917-ஆம் ஆண்டில் பேட் குறிப் பிட்டார். மேலும், அவர்கள் பெரும்பாலும், தங்கள் நிலத்தைத் தாங்களே உழுது பயிர் செய்து வந்த வேளாண் மக்களாகவும். சிறு வியாபாரிகளாகவும் வாழ்க்கை நடத்திவந்த மிகச் சிறந்த செழிப்பும் ஊக்கமும் வாய்ந்த குலத்தினர் என்றும் பேட் குறிப்பிட்டார். முடிவைத்தானேந்தலிலிருந்தும், அதனைச் சூழ்ந்த நற்குடி வேளாளர் குடியிருப்புக்கள் பிறவற்றிலிருந்தும் போர்ப்படை, காவலர்படை போன்றவற்றில் பெருந்தொகையினர் சேருகின்றனர் இக்காரணத்தால் சென்னையிலிருந்து வெளி வரும் "இந்து" வின் 9-1-1966-ஆம் நாளைய இதழில் வெளியிடப்பட்ட ஒரு செய்தியில் முடிவைத்தானேந்தல் "படையினர் ஊர்" (சவான்கள் ஊர்) என அழைக்கப்பட்டது. நற்குடி வேளாளரிலும். கோட்டை வேளாளரிலும். இறந்தோர் உடல்கள் பொதுவாகச் சுடப்படுகின்றன. நற்குடி வேளாள ரிடையே சாவுச் செய்திகள் நாவிதன் மூலம் சொல்லியனுப்பப் படுகின்றன. பிணத்தை எடுப்பதற்குமுன் நெருங்கிய உறவினர் கள் அனைவரும் வந்து சேர்தல் வேண்டும். தர்ஸ்டன் கூற்றுப் படி முன்னுளில் நற்குடியார் வாழும் ஒவ்வொரு ஊரிலிருந்தும் குறைந்தது இரண்டு நற்குடி வேளாளராவது பிணம் எடுக்கு முன் வந்து சேர்ந்திடல் வேண்டுமாம். இழவு வீட்டுக்கு வேண்டியவர்கள் வராதிருப்பது அவ் வீட்டாருக்குச் செய்யும் பெரும் அவமானமாகக் கருதப்படுகிறது. இறந்த நாளைக்கு மறுநாளில் அரைக்கீரையைச் சமைப்பர். கோட்டை வேளாள ரிடையே இறுதிச் சடங்குக்கான செயல்களைக் கொத்தமார் செய்வர். பின் அவர்களே பிணத்தையும் தூக்கிச் செல்வர். கோட்டையின் வடக்குவாயில் வழியாகப் பிணங்களைத் தூக்கிச் சென்று சுமார் 600 அடி தொலைவில் உள்ள சுடுகாட்டில் சுடுவர். கோட்டையின் வடக்கு வாயில் பிணங்களைத் தூக்கிச் செல்ல மட்டுமே திறக்கப்படும்.

பின் சேர்க்கை

நற்குடி வேளாளர் வரலாற்றில் குறிப்பிடப்படும் இருங்கோவேளிர் கொடிவழி—விசய பூபதி காலம் முதல் (174முதல் வரும் வரிசை எண்கள் தொடக்க இருங்கோவேளை முதல் வனுகக் கொண்டு கணக்கிடப்பட்ட வரிசை எண்கள் எனக் கூறப்படுகிறது.

1. விசயபூபதி (174) 1225—65

2 மாலிருங்கோ (175) 1265—90

3. புகழும்பெருமாள் (176) 1290—1309

4. தம்பிரான்குட்டி (177) 1309—30

5. மாலிருங்கோ (178) 1330—72

6, தம்பிரான்குட்டி (179) 1372—95

7. மாலிருங்கோ (180) 1395—1425

8. புகழும் பெருமாள் (181) 1425—56 54

9. மாலிருங்கோ (182) 1456—88

10. புகழும் பெருமாள் (183) 1488—1525

11. திருவாய்மொழிப்பெருமாள் (184) 1525—54

54, நாகம நாயக்கரோடு தொடர்பு கொண்டதாகக் கூறப்படுபவர்.

12. அத்திகிரிநாத இருங்கோ (185) 1554—99

13. திருவாய்மொழிப்பெருமாள் (186) 1599—1618 [55]

14. அத்திகிரிநாத இருங்கோ (187) 1618—22

15. தம்பிரான்குட்டி (188) 1622—85

16. மாட்டுடையிருங்கோ (189) 1625—35 [56]

17. தம்பிரான்குட்டி (190) 1635—75

18. புகழும் பெருமாள் [57] (191) 1675 - 95

அணஞ்சிற்பிள்ளை — உடன் பிறந்தாள் — 19 (அ) அருணசலம்

சீதை

அணஞ்சிற்பிள்ளை (பெண்)

19 (ஆ) புகழும் பெருமாள் [58] (192) 1695—1715

20, வள்ளியம்மை (193) 1715—51

55. ஸ்ரீவைகுண்டம் கோயில் கோபுரத்தின்மேல் விளக்கேற்றியவர் எனக் கூறப்படுகிறது.

56. 1884-இல் வெளியான சீவெல்லின் "கல்வெட்டுக்களின் பட்டியலில்" 57-ஆம் எண்ணுள்ள செப்புப் பட்டயத்தில் குறிப்பிடப்படும் "இருங்கோள் பிள்ளை"

57. இவர் மனைவி பெயர் அணஞ்சிற் பிள்ளை. அம்மனைவியின் தங்கை மகன் அருணசலத்தைத் தத்து எடுத்தார்.

58. சின்ன இருங்கோ என்பது இவர் பட்டப்பெயர்.

அழகன் [59] கள்ளப்பிரான் [59] 21, அருணசலம் (194) 1751—95

22. புகழும்பெருமாள் (195) 1795—1805

23. போற்றியடி இருங்கோ (196) 1805—25 [60]

24. அருணசலம் (197) 1825—48

25. போற்றிடி இருங்கோ (198) 1848...60

26. அருணசலம் (199) 1860...1920

கருத்தப்பாண்டியன் என்ற போற்றியடி இருங்கோ [61]

27, அருணசலம் (200) 1920...32

28. போற்றியடியா இருங்கோளன் (201) 1932...44 — மகள் — மக்கள்

வெள்ளைத்தாய் (மகள்) — மகள் — மக்கள்

மகள்

முத்துசாமி கிராம முனிசீபு 1944...60 — மக்கள்

நாராயணசாமி — மக்கள்

59. இருவரும் போரில் மாண்டனர்.

60. முடிவைத்தானேந்தலுக்குக் குடி பெயர்ந்தார்.

61. 1920-க்கு முன் இறந்து விட்டார்.

நிலப்படம் (அ): நற்குடி வேளாளர் செழுவையிலிருந்து (மேலச் செழுவனூரிலிருந்து) குடி பெயர்ந்ததையும், அவர்கள் தற்பொழுது குடியிருந்து வரும் ஊர்களையும் விளக்கும் படம்



எண்ணில் குறிக்கப்பட்டுள்ள நற்குடியார் குடியிருக்கும் ஊர்களின் பெயர்கள் :-

1. செட்டியூரணி
2. சொக்கலிங்கபுரம்
3. தளவாய்புரம்
4. செக்காரக்குடி (கிழக்கு)
5. கொற்கை
6. வர்த்தக ரெட்டிபட்டி
7. சேரந்தைய பிள்ளை குடியிருப்பு
8. பாண்டியபுரம்
9 பொட்டலூரணி
10. முடிவைத்தானேந்தல்
11. புதூர் (முடிவைத்தானேந்தல்)
12. புதூர் (கட்டாலங்குளம்)
13. செவலை
14. ஏரல்

நிலப்படம் (ஆ): மேலச் செழுவனூரைச் சுற்றிய பகுதியைப் பெரிய அளவில் காட்டுவது

(ஸ்ரீ வைகுண்டம் வட்டத்திற்குக் குடியேறிச் செல்வதற்கு முன் இவ் வட்டாரத்தில் நற்குடி வேளாளர் உடைமையாய் இருந்தனவாகக் கூறப்படும் 22½ ஊர்களில் கீழ்க் குறித்துள்ளவை தவிரப் பிற எங்கிருந்தன என்று அறியக் கூடவில்லை)

அளவு (சுமார்) — 1″ = 1½ மைல்



மேகலைத் தமிழ்

திரு. புலவர் தி. நா. அறிவு ஒளி

தண்டமிழாசான் சாத்தன் தந்த தனித்தமிழ்ப் பாவியம் மணிமேகலையாகும். மணிமேகலை வெறும் இலக்கியம் மட்டுமன்று; கருத்திலக்கிய மாகும், வாழ்வின் பல கூறுகளையும், பல கோணங்களையும் ஆய்ந்த புலவர், அவ்வாராய்ச்சியின் பயனைக் கண்ட உண்மைகளையும் ஒளிவு மறைவின்றி உரைத்துள்ளார். தம் காலக் கருத்துகளைக் காட்டும் சாத்தனார், எக்காலத்திற்கும் உரிய கருத்துகளையும் கூறுகிறார்.

பண்டைக் காலத்தில் சிறப்புடைய மக்களையே தம் மக்கள் எனப் பெற்றோர் போற்றிக் கருதினர். சிறப்பில்லாத மக்களை மறந்து ஒழிவர். ஆகவே அறிவறிந்த நன்மக்களே போற்றற் குரியர் என்று அறிவு கொளுத்துகிறார் புலவர்

"சிறப்பின் பாலார் மக்கள்; அல்லார்
மறப்பின் பாலார் மன்னர்க்கு ....."
[மேகலை : 23–சிறைவிடு காதை : 31–32]

ஆட்சிநெறி பற்றி வாழும் அரசக்குடியிற் றோன்றும் மக்கள் சிறப்பொழுக்க முடையராதல் வேண்டும் என்ற பண்டைத் தமிழக மரபு எத்துணைச் சீரியது! இன்றும் இந்நெறியை இளைஞர்க்கு அறிவுறுத்த வேண்டும்.

பெற்றோர் சீரிய மக்களை ஈன்று புறந்தருதலே அவர்க்கும் பிறர்க்கும் இனிதாம்! பொல்லாத மக்களைப் பெற்று ஊரையும் உலகையும் கெடுப்பதினும் பிள்ளை பெறாது மடிதலே பெருமைக் குரியதன்றோ?

சீர்த்தி என்ற சோழநாட்டு அரசி மணிமேகலைக்குத் தீங்கு பல செய்தாள். அவற்றால் மணிமேகலை தாக்கப்படவில்லை. சீர்த்தி தன் தவறுணர்ந்து மணிமேகலையை வணங்கிப் பொறுத் தருள வேண்டுகின்றாள் அப்போது மணிமேகலை, "நீ ஓர் உயிரினிடம் அன்புடையவளா யிருந்தால், எல்லா உயிரிடமும் அன்பு கொண்டு கண்ணோட்டம் காட்ட வேண்டும்!" என்று அறிவுறுத்துகிறாள்.

"அவ்வுயிர்க்கு அன்பினை யாயின் ஆய்தொடி!
எவ்வுயிர்க்கு ஆயினும் இரங்கல் வேண்டும்!"
[மேகலை: 23-சிறை விடு காதை: 78-79]

எல்லா உயிர்க்கும் இரங்கல் வேண்டும் என்ற சாத்தனரின் முழக்கமே தமிழன் உயிர்க் கொள்கை! 'யாவரும் கேளிர்' என்ற பூங்குன்றன் மொழியும், "ஆருயிர்க்கெல்லாம் நான் அன்பு செய்தல் வேண்டும்!" என்ற வடலூர் அடிகளாரின் அருண் மொழியும், 'அன்பின் வழியது உயிர் நிலை' என்ற குறளறமும் 'அன்பே சிவம்' என்ற திருமூலர் திருநெறியும் தமிழினத்தின்—தமிழின் கோட்பாட்டைத்—தெளிவாக்கும்.

"கடாஅ யானைமுன் கள் கா முற்றோர்
விடாஅது சென்றதன் வெண்கோட்டு வீழ்வது
உண்ட கள்ளின் உறுசெருக் காவது
கண்டும் அறிதியோ காரிகை நல்லாய்!
பொய்யாற்று ஒழுக்கம் பொருள்எனக் கொண்டோர்
கையாற்று அவலம் கடந்ததும் உண்டோ?
களவுஏர் வாழ்க்கையர் உறூஉங் கடுந்துயர்
இளவேய்த் தோளாய்க்கு இதுஎன வேண்டா.
மன்பேருலகத்து வாழ்வோர்க்கு இங்கு இவை
துன்பந் தருவன துறத்தல் வேண்டும்!
கற்ற கல்வி அன்றால் காரிகை
செற்றம் செறுத்தோர் முற்ற வுணர்ந்தோர்
மல்லல் மா ஞாலத்து வாழ்வோர் என் போர்
அல்லல் மாக்கட்கு இல்லது நிரப்புநர்
திருந்து ஏர் எல்வளை செல்லுலகு அறிந்தோர்
வருந்தி வந்தோர் அரும்பசி களைந்தோர்
துன்பம் அறுக்கும் துணிபொருள் உணர்ந்தோர்
மன்பதைக்கு எல்லாம் அன்பு ஒழியார்"

[மேகலை: 23-சிறைவிடு காதை: 120-138] என்ற அறிவு மழைக் கருத்துகளை அரசிக்கு மணிமேகலை கூறுகிறாள்.

கள்ளுண்டல், பொய்ந்நெறி வாழல், களவு செய்தல் உயிர்க்குத் தீங்கு தரும் என்றும், உலகமக்களுக்கு ஐவகைக் குற்றங்களும் துன்பம் தருவன; ஆகவே அவற்றைக் கைவிட வேண்டும் என்றும், கற்றவர் மெய்யுணர்வு பெற்றவராகார் உள்ளத்தில் சினம் தோன்றாமல் அடக்கியவரே முழுதும் உணர்ந்தவர் ஆவர் என்றும், வறுமைத் துன்பத்தில் வாடும் மக்களுக்கு வேண்டியவற்றை அளிப்போரே உலகில் வாழ்கின்றவர்

என்று கூறுதற்கு உரியவர் என்றும், பசியால் வாடுபவர் தம் பசியைத் தீர்த்து உணவு வழங்கியவரே பேறுபெற்றவர் என்றும், எல்லா உயிர்களிடத்தும் அன்பு பூண்டு, அவ்வன்பு என்றும் நீங்காத வண்ணம் துன்பம் களைபவரே மெய்ப்பொருள் உணர்ந்தவர் என்றும் மணிமேகலை வாய்மொழி வாயிலாக வையத்திற்கு அறம் கூறுகின்றார் புலவர் பெருமான்!

"பிறப்பதும் முதுமையடைவதும் நோயுற்று வருந்துவதும் பின் இறப்பதும் ஆகியவற்றை யடைவது இவ்வுடம்பாகும். இவ்வுடம்பு இடும்பைக்குக் கொள்கலமாகும். மக்கள் யாக்கையின் மெய்ம்மையுணர்ந்து மிகுந்த நல்லறத்தைவிரும்பி மேற்கொண்டேன்." என மணிமேகலை உதயகுமரனுக்கு அம்பலத்தில் கூறுகிறாள்.

நிலையாமையின் நிலைத்த கூறுகளுக்கு இலக்கமாக அமைந்தது மக்கள் யாக்கை யென்பதை நன்கு தெளிந்தே அறவாழ்வில் தானே விருப்ப முற்றதாக மணிமேகலை கூறுகிறாள். மாதவியின் தூண்டுதலால் மட்டும் மணிமேகலை துறவியாக வில்லை யென்பதை இங்குச் சாத்தனார் சுட்டுகிறார்.

"பிறத்தலும் மூத்தலும் பிணிபட்டு இரங்கலும்
இறத்தலும் உடையது இடும்பைக் கொள்கலம்
மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து
மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்"

[மேகலை - 18; உதயகுமரன் அம்பலம் புக்க காதை : 136-139]

'திருந்தாச் செய்கைத் தீத் தொழில் உலகில் நிகழ்தல் கூடாது' என்பது சாத்தனார் கொள்கை.

துன்பம் வரினும் இன்பம் வரினும் தீமை மேற்கொள்ளாற்குரியதன்று.

மக்கள் காமத்திற்கு எளிதில் மயங்கி வீழ்ந்து படுவர். அது தீயது என அறிந்தோர் அறிவு மயங்கி அதனால் அழியார் என்கிறார் புலவர்.

"சிறையும் உண்டோ செழும் புனல் மிக்குழீ இ நிறையும் உண்டோ காமம் காழ்க் கொளின்?" என்று சாத்தனார் உதய

குமரன் கூற்றில் காமத்தின் பேராற்றலைக் குறிப்பிட்டுக் காட்டு கிருர். ஆயினும் நம் முள்ளத்தில் தீய வழிக்கு இடம் தரலாகாது என்கிருர்.

"தீநெறிப் படரா நெஞ்சினை ஆகுமதி"
[மேகலை; 5 - மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை 29]

உலகிலுள்ள ஒவ்வொரு மாந்தனுக்கும் தனித்தனி இந்த அறிவுரையைச் சாத்தனுர் வற்புறுத்திக் கூறுகிருர்.

உயிர் சிலகாலமே உடம்பிற் குடியிருக்கும். நிலையாமை வாய்ந்தது உலகோர் உயிர் வாழ்வு. அதைச் சுட்டிக்காட்டியே சான்ரேர் மக்களைத் திருத்துவது வழக்கம். வயதுமிக்க முதியவர்கள் என்ரே, மிகவும் இளமையானவர் என்ரே, குழந்தை ஈன்ற இளம் பெண்டிர் என்ரே, பச்சிளங் குழந்தை என்ரே, துறவிகள் என்ரே, பெரிய செல்வர் என்ரே, எண்ணுமல் கொடிய தொழிலாளியாகிய கூற்றுவன் அனைவர் உயிரையும் அழிப்பான். அவர்கள் உடம்பை இச்சுடலை தன்னிடம் சேர்த்துக் கொள்ளும். இத்தகு நிலையாமையுள்ள வாழ்வில் செல்வம் என்ற கள்ளைக் குடித்து ஆட்டமாடியும், தீமை செய்தும், உயரிய நல்லறத்தை விரும்பாமல் வாழும் மக்களைப் போலும் சிறந்த அறிவில்லாதவர் யார் இருக்க முடியும்?

"தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வர்
ஈற்றிளம் பெண்டிர் ஆற்ருப் பாலகர்
முதியோர் என்னுன் இளையோர் என்னுன்
கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்பஇவ்
வழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும்
கழிபெருஞ் செல்வக் கள்ளாட்டு அயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாது வாழும்
மக்களிற் சிறந்த மடவோர் உண்டோ?

[மேகலை: 6 - சக்கரவாளக் கோட்ட முரைத்த காதை; 97 - 104]

"உலகில் இளமை, உடம்பு, பெருஞ் செல்வம் ஆகிய எதுவும் நிலைபெறுவதில்லை. பிள்ளைப் பேறும் பேரின்பம் அருளாது, நமக்கு மிகுந்த சிறப்புடைய அறமே விழுத் துணை (உயர்ந்த பற்றுக் கோடு) ஆகும்" எனச் சாத்தனுர் தெள்ளத் தெளிவாக ஒளி காட்டுகிருர்:

"இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா
புத்தே ளுலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணை யாவது

[மேகலை: 22 - சிறை செய் காதை: 135 - 138]

குற்றங்கள் இல்லாத வாழ்க்கையே சீரிய வாழ்க்கை. பல குற்றங்களுக்குத் தாய் காமமேயாகும். இதனை இன்றைய பாலுணர்ச்சியியல் ஆய்வாளர்களும் விளக்கியுள்ளனர். சாத்தனர், "முடிவான மெய்ப்பொருளை யுணர்ந்த சான்றோர், உலகில் பெரியோரால் வெறுத்து விலக்கப்பட்டன ஐந்து உள்ளன. அவற்றுள், 'கள் — பொய் — களவு கொலை' என்ற நான்கு குற்றங்களையும் காமம் நீக்காது. ஆகவே, காமத்தை நீக்கினல் மற்ற நான்கு குற்றங்களையும் வெல்லலாம். காமத்தை வென்றவரே தவ ஒழுக்கம் நிரம்பிய துறவுடையோர் ஆவர். காமத்தைக் கடியாதவர் நிரயம் சேர்ந்து நீடழிவடைவர்" என்கிருர். காமவெறி கடு நோயாய் மண்டி மிடையும் இந்நூற்ருண்டிற்கு இந்த அமிழ்த அறவுரை நனிமிக இன்றியமையாததாகும்

"முடி பொருள் உணர்ந்தோர் முதுநீர் உலகில்
கடியப் பட்டன ஐந்து உள அவற்றில்
கள்ளும் பொய்யும் களவும் கொலையும்
தள்ளா தாகும் காமம் தம்பால்
ஆங்கு அது கடிந்தோர் அல்லவை கடிந்தோர் என
நீங்கினர் அன்றே நிறை தவ மாக்கள்
நீங்கார் அன்றே நீள் நில வேந்தே
தாங்கா நரகந் தன்னிடை யுழப்போர்"

[மேகலை: 22 - சிறை செய் காதை: 169 — 176]

சாத்தனரின் புரட்சி சான்ற புலமையுள்ளம் காலங் கடந்த முற்போக்கான கருத்தை மணிமேகலை இலக்கியத்தில் அமைத்துள்ளது. சிறைக் கோட்டம் அறக் கோட்டமாக்கப்பட வேண்டும் என்று ஈராயிரம் யாண்டுகளுக்கு முன்னர் தமிழ்ப் புலவர் தம் பாவியத்தில் வழிகாட்டியுள்ளார். மணிமேகலையை வெறுந் துறவியாக அமைக்காமல் புரட்சித் துறவியாகக் காட்டிய திறம் வியப்பெல்லையைக் கடந்ததாம்.

சிறைக் கூடங்கள் குற்றவாளியர் கிடைகளாகக் கிடக்கின்றன. அம்மட்டோ? குற்றம் புரிந்தோரைக் கொடுங்கயவராய் மாற்றி வைக்குந் தொழிற் கூடங்களாகவும் உள. காவல் துறை, அற மன்றம், சட்டங்கள், சட்டச் செயலியக்கங்கள், ஒற்றுத் துறை யாவும் குற்றம் ஓம்பும் உலைக்களங்களாக அமைந்து கிடக்கும் குறைபாடு நல்லறிஞரால் ஆராயப்பட்டுச் சுட்டிக் காட்டப் பெற்றுள்ளமை அறிவோம். இந்நிலைகுறித்து பல நூற்றுண்டுகளுக்கு முன்னரே சாத்தனர் ஆய்ந்து கூறும் அறிவுரை கண்டு வியப்புக் கடல் ஆழ்கிறோம்.

சாத்தனர் சிறைக் கோட்டமே உலகில் இருத்தலாகாது, என மாபெரும் புரட்சி வித்தூன்றியுள்ளார்! சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆதல் வேண்டும் என்கிறார். சாத்தனரின் கனவை நனவாக்க அறவோரும் அரசும் அனைத்துலக மக்களும் முன்வரவேண்டும்.

அவர் நூலில் அறவோர் சார்பில் மணிமேகலையும் அரசின் சார்பில் சோழ மன்னனும் உருவகமாகப் படைக்கப்பட்டுள்ளனர்!

“அதிர்கழல் வேந்தன் அடிபிழைத் தாரை
ஒறுக்குந் தண்டத் துறுசிறைக் கோட்டம்
விருப்பொடும் புகுந்து வெய்துயிர்த்துப் புலம்பி
ஆங்குப் பசியுறும் ஆருயிர் மாக்களை
வாங்கு கையகம் வருந்த நின்று ஊட்டலும்

[மேகலை : 19 — சிறைக்கோட்டம் அறக் கோட்டமாக்கிய காதை : 42 — 46]

‘ஆற்று மாக்கட்கு ஆற்றுந் துணையாகி, ஏற்றலும் இடுத்தலும் இரப்போர் கடன் அவர் மேற் சென்று அளித்தல் விழுத்தகைத்து’ என்று நூற்பொருள் உணர்ந்தோர் நுனித்தனர், என்றெண்ணி ஏழைகளுக்கு உணவினை யாண்டும் சென்று, அவர் வேண்டும் அளவுக்கு ஊட்டிய மணிமேகலை ஒறுப்பதற்காக அடைத்து வைக்கப் பெற்றுள்ள வழுவுடையார் தம் மிகுந்த பசியைப் போக்கினள்.

மணிமேகலை சிறையிலுள்ளவர் கொடும் பசி நீக்கி உண ஊட்டிய செய்தியைக் காவலர் சோழனுக்குச் சொன்னர்கள். அவன், “நான் செய்யக் கூடிய செயல் யாது?” என வினவினன். அதற்கு மணிமேகலை,

"சிறையோர் கோட்டம் சீத்தருள் நெஞ்சத்து
அறவோர்க் காக்கும் அது வாழியர்"

என அறிவுறுத்தினள். அவள் கருத்தைச் சோழன் ஏற்கிறான்.

"அருஞ்சிறை விட்டு ஆங்கு ஆயிழை உரைத்த
பெருந்தவர் தம்மால் பெரும்பொருள் எய்தக்
கறையோர் இல்லாச் சிறையோர் கோட்டம்
அறவோர்க்கு ஆக்கினன் அரசு ஆள் வேந்தென்"
[மேகலை : 19 — 155 — 162]

"சோழன் சிறையிலிருந்தோரை விடுதலை செய்தான். பெருந்தவமுடையவரை ஓம்பினான். அறத்தைப் பயனாக அடைந்தான். கடமை செலுத்தத் தவறியவரையும் 'கறை வீடு' செய்தான். சிறைக் கோட்டம் அறக் கோட்டம் ஆயிற்று" என்கிறார் புரட்சிப் புலவர்.

அறவோர் கருத்துப்படி அரசு ஒழுகினால் சிறைகளும் கறைகளும் ஒழியும்; அறம் ஓங்கும்; அமைதி நிலவும் என்பதைக் கதை வாயிலாக 'இலக்கிய அறிவாக'ச் சாத்தனார் மொழிகிறார்.

சிறைக் கோட்டம் கொடுமைக் கோட்டமாக இருத்தலாகாது எனவும்; அஃது சீர்திருத்தப் பண்ணையாகல் வேண்டும் எனவும், குற்றம் புரிந்தோர்க்கு விடுதலை யளித்து, நல்லறம் உணர்த்துதல் அரசின் கடமை எனவும், அறவோரும் அரசியலாரும் ஒன்றிய உளத்தராய் மக்களைத் திருத்துதலே மாண்புடைச் செயல் எனவும் 'சாத்தன் தமிழ்' சால்புரைக்கிறது!

மணிமேகலை தோன்றிப் பல நூற்றாண்டுகள் ஆகியும் உலகில் சிறைக்கூடங்கள் வளர்கின்றனவே யன்றிக் குறையவோ மறையவோ காண்கிலேன். எவ்வளவு நாணத்தக்க நிலை! இந்நிலை மாறிட அறிவுலகம் முயல வேண்டும், இலக்கியம் காட்டும் வழியில் வாழ்வு நிகழ்ந்தாற்றான் 'இன்பம்' எனும் குறிக்கோளை எய்த முடியும்.

வாழ்க்கையின் மேற்படியிலுள்ளோரால் புறக்கணிக்கப் பட்டோரைப் பற்றியும் மக்கட் பண்புணர்வோடு எண்ணி அருள் நெஞ்சோடு அவரும் அறநெறிப்படர இலக்கியம் படைத்த சாத்தன் மக்களினப் புலவனாக மலர்ந்த மாட்சியை உலகெலாம் உணர, உணர்த்துவது நற்றமிழர் கடமையாகும்.

மகாவித்துவான் ரா. இராகவையங்கார் அவர்களின்

நூற்றாண்டு விழா.

மகாவித்துவான் உயர்திரு. ரா. இராகவையங்கார் அவர்கள் தோன்றி நூறாண்டுகள் 20—9—70-ஆம் நாளன்று நிறைவுற்றது. இந் நன்னாளில் நூற்றாண்டு விழா அவர் பிறந்து வளர்ந்த சேது நாட்டின் தலைநகர மாகிய இராமநாதபுரத்தில் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. மகாவித்துவான் அவர்களின் நுண்மாண் நுழை புலமையும், தமிழ் மொழி வளர்ச்சிக்கான ஈடுபாட்டினையும் தமிழன்பர்கள் அனைவரும் அறிவர். 1935 இல் நிகழ்ந்த கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் இருபத்து நான்காவது ஆண்டு விழாவில் அவர்கள் தலைமை வகித்து சிறப்புறச் செய்தார்கள். அவ்வமயம் மகாவித்துவான் அவர்களுக்கு நமது சங்கத் தாரால் அளிக்கப்பெற்ற வரவேற்புப் பாக்களில் சிலவற்றை ஈண்டுக் கூறுவதே நம் நன்றியையும் அன்பினையும் காட்ட ஏற்றதாகும்.

செந்தமிழின் முதற்றலைவன் செய்தனவாம் தாய்த்தொண்டு செப்பற்பாற்றே!
முந்திய நூல் செய்யுள் பல முறையாக வச்சிட்டான்; முயலா தாரும்
பிந்தியநள் ளிருட்காலப் பிணக்கமெலாம் நுழைந்தாய்ந்து பிறக்கும் உண்மை
தந்திடுவான் ஐயங்க டமையறுப்பான் ஆய்ச்சிமுறை தருவான் அம்மா

கண்டின்மிக வினிக்கின்ற கட்டுரைகள் பலதந்தான்; கருத்து மிக்க
எண்டொகையுள் அகத்திற்கங் கியலுரையுள் ளுறைதோன்ற
இயற்றிவைத்தான்
வண்டிறலார் வடகடலுள் நலமுகந்து தமிழ்க்கடலுள் வார்த்துக் கொள்வான்
தண்டமிழ்த்தேன் ஒழுக்கமெனும் தாழிசைசெய் தோங்குமிசை தானுங் கொண்டே

எத்தனையோ புலவர்களை இப்புவித்தாய் பெற்றேற்றம் எல்லாம் செய்தாள்
அத்தனைபேர் தங்களிலவ் வன்னையினுக் கொருமாலையன்பி னீந்த
வித்தகரை யாமறியேம் : வியன்ஞால விரிவஞ்சி விடுத்தார் போலும்
புத்தமுதம் எனப்புனைந்தான் புவியெழுப தெனுமாலை புலவர் கோவே !

வள்ளன்மைப் பெரும்பாரி வளர்புகழன் எனப்புலவர் வரைவர்; அங்ஙன்.
விள்ளுமது வினைத்தொகையா விரிஞாலத் திஞ்ஞான்றும் விளங்கும் வண்ணம்
பல்புலவர் உடன்புணர்ந்து பழகிநரும் பாடாத பண்பை யெல்லாம்
சொல்வளங்கூர் வெண்பாவிற் சொற்றவன்றன் றாய்த்தொண்டிற் றாயதுண்டே !

மூவேந்தர் வழிமுறைக்கு முன்பொருகால் அவைப்புலமை முன்னுங்கூத்தன்
நாவேந்து பாவலனாய் நற்குருவாய் நற்றுணையாய் நாடி நின்றான்;
பாவேந்தர் வேந்தனவன் பண்பெல்லாம் படைத்தனன்நம் பாவல்லோனும் :
காவேந்து தமிழ்நாடு கருதுசிறப் பளித்துயர்த்துங் கடமைத் தன்றே

(ஆக்கியோர்—கரந்தைக் கவியரசு
வேங்கடாசலம் பிள்ளை அவர்கள்)